# வகுப்பு - 8 - விலங்கியல், 20 - வளரிளம் பருவமடைதல்

36. ஆண்களின் வியர்வை சுரப்பிக்குக் காரணமான ஹார்மோன் ______.

(1) ஈஸ்ட்ரோஜன் (2) ஆண்ட்ரோஜன் (3) புரோஜெஸ்ட்ரான் (4) அனைத்தும்

37. இனப்பெருக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஹார்மோன் ______.

(1) அடலாய்டு வகை (2) ஈஸ்ட்ராய்டு வகை

(3) ஸ்டீராய்டு வகை (4) ஆண்ட்டிரோடி வகை

38. பெண்களில் எவை செயல்படத் துவங்குவதால் பருக்கள் உண்டாகின்றன?

(1) ஹார்மோன் சுரப்பி (2) எண்ணெய் சுரப்பி

(3) பித்தப் பை (4) அட்ரினல் சுரப்பி

39. ஆண்கள் மற்றும் பெண்களில் இனப்பெருக்கம் மற்றும் இனப்பெருக்க நடத்தைகள் முக்கியமாக எந்த ஹார்மோன்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன?

(1) LH மற்றும் FSH (2) LH மற்றும் RSH (3) SH மற்றும் FSH (4) FLH மற்றும் FSH

40. கார்ப்பஸ் லூட்டியம் கர்ப்பப்பையில் எத்தனை நாட்கள் நீடித்து குழந்தை பிறப்பு உண்டாகிறது?

(1) 250 (2) 260 (3) 280 (4) 220

41. அண்டமானது கருவுறவில்லை எனில் சிதைவடையும் ஹார்மோன் எது?

(1) ஆக்சிடோசின் (2) லூசியாடிக்

(3) கார்ப்பஸ் லூட்டியம் (4) புரோலாக்டின்

42. மாதவிடாய் சுழற்சி எந்த வயதில் நின்று விடுகிறது?

(1) 40 - 45 வயது (2) 50 - 60 வயது (3) 30 - 45 வயது (4) 45 - 50 வயது

43. எந்த பால் பண்பு ஆண், பெண்களுக்கிடையே உடலமைப்பில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றன?

(1) முதல் நிலை (2) இரண்டாம் நிலை

(3) மூன்றாம் நிலை (4) இவை யாவும் இல்லை

44. பெண் இனப்பெருக்க ஹார்மோன் எவை?

(1) ஈஸ்ட்ரோஜன் (2) ஆண்ட்ரோஜன் (3) புரோஜெஸ்ட்ரான் (4) 1 மற்றும் 3

45. இடையீட்டு செல்களின் வேறு பெயர் ______.

(1) லீடிக் (2) பாலிக்கிள் (3) விந்தகம் (4) அண்டகம்

46. அண்டகத்திலிருந்து முதிர்ச்சியடைந்த அண்டமானது எத்தனை நாட்களுக்கு ஒரு முறை வெளியேறுகிறது?

LIVEWORKSHEETS

(1) 20 - 30 நாட்கள் (2) 25 - 30 நாட்கள் (3) 26 - 30 நாட்கள் (4) 28 - 30 நாட்கள்

47. குழந்தைப் பிறப்பின்போது தசைகளை சுருங்கச் செய்து குழந்தைப் பிறப்பை எளிதாக்க உதவும் ஹார்மோன் _______.

(1) ஆக்சிடோசின் (2) புரோஜெஸ்டிரான் (3) ஆண்ட்ரோஜன் (4) பைல்ருபின்

48. பருவமடைதலின்போது, இடுப்பிற்குக் கீழ் உள்ள பகுதியானது _______ ல் அகன்று காணப்படுகிறது.?

(1) ஆண்கள் (2) பெண்கள் (3) 1 மற்றும் 2 (4) எதுவுமில்லை

49. மாதவிடாயின்போது புரோஜெஸ்டிரானின் அளவு _______.

(1) அதிகரிக்கிறது (2) குறைகிறது (3) நின்று விடுகிறது (4) இயல்பாக உள்ளது

50. கூற்று (அ): இரண்டாம் நிலை பால் பண்புகள் ஆண்கள் மற்றும் பெண்களிடையே உடல் அமைப்பில் வேறுபாட்டை ஏற்படுத்துகிறது.

கூற்று (ஆ): பெண்களில் இரண்டாம் நிலை பால் பண்புகள் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனால் கட்டுப்படுத்தப்படுகிறது.

கூற்று (இ): ஆண்களில் இரண்டாம் நிலை பால் பண்புகள் லூட்டினைசிங் ஹார்மோனால் கட்டுப்படுத்தப்படுகிறது.

கூற்று (இ): ஆண்களில் இரண்டாம் நிலை பால் பண்புகள் ஆண்ட்ரோஜன் ஹார்மோனால் கட்டுப்படுத்தப்படுகிறது.

(1) கூற்று (அ), (ஆ) மற்றும் (இ) சரி (2) கூற்று (அ), (ஆ) சரி மற்றும் (இ) தவறு

(3) கூற்று (அ) சரி மற்றும் (ஆ), (இ) தவறு (4) கூற்று (அ), (இ) சரி மற்றும் (ஆ) தவறு

LIVEWORKSHEETS